### தமிழ்நாட்டில் ஆயுஷ் கட்டமைப்பு மேம்பாட்டிற்கு

# கடந்த 5 ஆண்டுகளில் ஒதுக்கப்பட்ட நிதி எவ்வளவு?

## மக்களவையில் தமிழச்சி தங்கபாண்டியன் கேள்வி!

புதுடெல்லி, ஜூலை 30-



தென் சென்னை மக்களவைத் தொகுதி உறுப்பினர் தமிழச்சி தங்கபாண்டியன், தமிழ்நாட்டில் ஆயுஷ் (AYUSH) கட்டமைப்பு மேம்பாட்டிற்காக ஒதுக்கப்பட்ட நிதி, ஆயுஷ் மருத்துவ ஆராய்ச்சி மற்றும் அதற்கான நிதி ஒதுக்கீடு குறித்து மக்களவையில் கேள்வி எழுப்பினார்.

அதாவது, தமிழ்நாட்டில் ஆயுஷ் கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த மத்திய அரசு நிதி ஒதுக்கியுள்ளதா? அப்படியானால், கடந்த ஐந்து ஆண்டுகளில் ஆண்டுவாரியாகவும், மருத்துவமனை மற்றும் நிறுவன வாரியாகவும் ஒதுக்கப்பட்ட நிதியின் விவரங்கள் என்ன?

மேலும், ஆயுஷ் மருத்துவ ஆராய்ச்சி மற்றும் அதனுடன் தொடர்புடைய செயல்பாடுகளை ஊக்குவிக்க மத்திய அரசு எடுத்துள்ள நட வடிக்கைகள் என்ன? அதற்காக கடந்த ஐந்து ஆண்டுகளில் ஒதுக்கப்பட்ட நிதி எவ்வளவு? என்று கேள்வி எழுப்பினார்.

இதற்கு மத்திய ஆயுஷ் துறை இணை அமைச்சர் (தனிப்பொறுப்பு) பிரதாப்ராவ் ஜாதவ் எழுத்துப்பூர்வமாக பதில் அளித்தார். அந்த பதிலில் கூறப்பட்டுள்ளதாவது:

தேசிய ஆயுஷ் இயக்கத்தின் (National Ayush Mission NAM) கீழ், தமிழ்நாடு அரசின் மாநில ஆண்டு செயல் திட்டங்களின் (SAAP) அடிப்படையில் ஆயுஷ் கட்டமைப்பு மேம்பாட்டிற்கு கடந்த ஐந்து ஆண்டுகளில் பல்வேறு திட்டங்களுக்கு நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

2021-22ஆம் ஆண்டில் ரூ.5.97 கோடி, 2022-23ஆம் ஆண்டில் ரூ.17.94 கோடி, 2023-24ஆம் ஆண்டில் ரூ.40.87 கோடி, 2024 25ஆம் ஆண்டில் ரூ.100.21 கோடி மற்றும் 2025-26ஆம் ஆண்டில் ரூ.54.42 கோடி என மொத்தம் ரூ.219.41 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. இதில் ஆயுஷ் சுகாதார மற்றும் நல்வாழ்வு மையங்கள், ஒருங்கிணைந்த ஆயுஷ் மருத்துவமனைகள், மாவட்ட மருத்துவ மனைகளில் ஆயுஷ் பிரிவு கள், அரசு சித்தா, ஆயுர்வேதா, யுனானி, யோகா மற்றும் இயற்கை மருத்துவக் கல்லூரிகளின் மேம்பாடு, புதிய மருந்தகங்கள் உள்ளிட்ட திட்டங்கள் இடம் பெற்றுள்ளன.

சென்னையில் செயல்படும் யுனானி மருத்துவ மண்டல ஆராய்ச்சி நிறுவனத்திற்கு (RRIUM) கடந்த ஐந்து ஆண்டுகளில் மொத்தம் ரூ.54.22 கோடி நிதி ஒதுக்கப்பட்டு வழங்கப்பட்டுள்ளது.

மேலும், சித்த மருத்துவ ஆராய்ச்சிக்காக மத்திய சித்த மருத்துவ ஆராய்ச்சி கவுன்சிலின் (CCRS) சென்னை தலைமையகம், சென்னை சித்த மத்திய ஆராய்ச்சி நிறுவனம், பாளையங்கோட்டை சித்த மத்திய ஆராய்ச்சி அலகு மற்றும் மேட்டூர் சித்த மருத்துவ மூலிகைத் தோட்டம் ஆகியவற்றிற்கு கடந்த ஐந்து ஆண்டுகளில் நிதி வழங்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு அரசின் தகவலின்படி, சென்னை இந்திய மருத்துவ முறைகள் இயக்ககத்தில் (Indian Systems of Medicine) ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு (R&D) பிரிவு அமைக்கப்பட்டுள்ளது. இந்தப் பிரிவு இதுவரை 132 ஆராய்ச்சி ஆய்வுகளை நிறைவு செய்து, 5 ஆராய்ச்சிக் கட்டுரைகளை வெளியிட்டுள்ளது. சித்தா மற்றும் ஆயுர்வேத மருந்துகளின் தரநிலைப்படுத்தல், மதிப்பீடு உள்ளிட்ட ஆராய்ச்சிகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன.

ஆயுர்வேதம், ஹோமியோபதி மற்றும் சித்த மருத்துவத்தை ஊக்குவிக்கும் வகையில், மத்திய அரசின் ஆராய்ச்சி அமைப்புகள் அச்சு மற்றும் மின்னணு ஊட கங்கள் மூலம் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள், ஆரோக்கியக் கண்காட்சிகள், சுகாதார முகாம்கள், அறிவியல் வெளியீடுகள், சர்வதேச ஒத்துழைப்புகள், மருத்துவ ஆராய்ச்சிகள் மற்றும் திறன் மேம்பாட்டு பயிற்சிகளை மேற்கொண்டு வருகின்றன.

சித்த மருத்துவ ஆராய்ச்சியை மேம்படுத்த மத்திய சித்த மருத்துவ ஆராய்ச்சி கவுன்சில் (CCRS), 115 உள்துறை ஆராய்ச்சி திட்டங்கள், சித்த மருத்துவ மருந்துகளுக்கான தரநிலைகள் உருவாக்கம், 975 அறிவியல் ஆய்வுக் கட்டுரைகள் வெளியீடு, பனை ஓலைச் சுவடிகள் டிஜிட்டல் பாதுகாப்பு, பல்வேறு தேசிய நிறுவனங்களுடன் 24 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள், காசநோய் மற்றும் புற்றுநோய் தொடர்பான ஆராய்ச்சிகள், வர்ம சிகிச்சை ஒருங்கிணைப்பு உள்ளிட்ட பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

தேசிய ஆயுஷ் இயக்கத்தின் கீழ் ஆயுஷ் மருத்துவ ஆராய்ச்சிக்காக தனியாக நிதி ஒதுக்கப்படவில்லை என்றும், யுனானி மற்றும் சித்த மருத்துவ ஆராய்ச்சி கவுன்சில்கள் மூலம் தேவையான நிதி வழங்கப்பட்டு வருவதாகவும் பதிலில் தெரிவிக்கப்பட்டுள்ளது. கடந்த ஐந்து ஆண்டுகளில் சித்த மருத்துவ ஆராய்ச்சிக்காக மத்திய ஆயுஷ் அமைச்சகத்திடமிருந்து ரூ.299.43 கோடி மானியம் வழங்கப்பட்டுள்ளதுடன், ரூ.274.59 கோடி செலவிடப்பட்டுள்ளதாகவும பதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### அமெரிக்க டாலருக்கு எதிரான இந்திய ரூபாயின் மதிப்பு

# வீழ்ச்சியடைந்துள்ளதை நிலைப்படுத்த எடுத்த நடவடிக்கை என்ன?

## மாநிலங்களவையில் இரா.கிரிராஜன் கேள்வி!

புதுடெல்லி, ஜூலை 30-



அமெரிக்க டாலருக்கு எதிரான இந்திய ரூபாயின் மதிப்பு வீழ்ச்சியடைந்துள்ளதை நிலைப்படுத்த என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என ஒன்றிய அரசின் நிதி அமைச்சரிடம் திமுக எம்.பி. கிரிராஜன் கேள்வி எழுப்பியுள்ளார்.

நாடாளுமன்ற கூட்டத்தொடரில் கலந்து கொண்டுள்ள திமுக உறுப்பினர் இரா.கிரிராஜன், 2014ஆம் ஆண்டு முதல் அமெரிக்க டாலருக்கு எதிராக இந்திய ரூபாயின் மதிப்பில் ஏற்பட்ட முன்னெப்போதும் இல்லாத வீழ்ச்சியை ஒன்றிய அரசு கவனத்தில் கொண்டுள்ளதா? 2014ஆம் ஆண்டில் ஒரு அமெரிக்க டாலருக்கு இந்திய ரூபாயின் மதிப்பு 60 ரூபாய்க்கு குறைவாக இருந்த நிலையில், 96 ரூபாய்க்கும் அதிகமாக உள்ளதா? அமெரிக்க டாலருக்கு எதிராக இந்திய ரூபாயின் மதிப்பை நிலைப்படுத்த அரசாங்கத்தால் எடுக்கப்பட்ட தீர்வு நடவடிக்கைகள் என்ன? போன்ற கேள்விகளை நிதி அமைச்சரிடம் எழுப்பி இருந்தார்.

இதற்கு பதிலளித்துள்ள ஒன்றிய அரசின் நிதித் துறை இணை அமைச்சர் பங்கஜ் சௌத்ரி, சந்தையால் நிர்ணயிக்கப்படும் இந்திய ரூபாயின் பரிமாற்ற விகிதத்துக்கு, இலக்கோ, எல்லையோ, வரம்போ இல்லை என்றும், டாலர் குறியீட்டின் நகர்வு, மூலதனத்தின் போக்கு, வட்டி விகிதங்களின் நிலை, கச்சா எண்ணெய் விலையில் ஏற்ற இறக்கம், நடப்புக் கணக்குப் பற்றாக்குறை போன்றவை இந்திய ரூபாயின் பரிமாற்ற விகிதத்தைப் பாதிக்கும் காரணிகளாக இருப்பதாக தெரிவித்துள்ளார். 2014-15ஆம் நிதியாண்டில், ஒரு அமெரிக்க டாலருக்கு எதிரான இந்திய ரூபாயின் மதிப்பு ரூ. 58.34லிருந்து ரூ. 63.89 என்ற வரம்பில் வர்த்தகமானது என்றும், தற்போது ரூ. 94.97லிருந்து ரூ. 96.26 என்ற வரம்பில் வர்த்தகமாக இருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்நியச் செலாவணி சந்தையைத் தொடர்ந்து கண்காணித்து வரும் இந்திய ரிசர்வ் வங்கி, வெளிநாட்டு வர்த்தகக் கடன்களுக்கான செலவு மீதான கட்டுப்பாடுகளை நீக்குதல், செபியிடம் பதிவு இல்லாமல் பங்குச் சந்தையில் வர்த்தகம் செய்யப்படும் பங்குப் பத்திரங்களில், வெளிநாடு வாழ் இந்தியர்கள் (NRI) மற்றும் வெளிநாட்டு இந்தியக் குடிமக்கள் (OCIS) முதலீடு செய்வதற்கான வரம்புகள் அதிகரித்திருப்பது; சலுகையுடன் கூடிய அந்நியச் செலாவணி மாற்று வசதி போன்ற நடவடிக்கைகளை எடுக்கப்பட்டுள்ளதாக ஒன்றிய அரசு பதிலளித்துள்ளது.

### மாதவரம் 19 ஆவது வட்டம் - மாத்தூர்

# மகளிர் அணி ஜெ. மகேஸ்வரி அம்மாள் மறைவு

## புழல் எம்.நாராயணன், மாத்தூர் கா.தாமரைச்செல்வன், ஆர்.பாபு, எஸ்.உதயகுமார் கழகத்தினர் அஞ்சலி!



சென்னை,ஜூலை.30-

சென்னை வடகிழக்கு மாவட்டம் மாதவரம் வடக்கு பகுதி 19ஆவது வட்டம் மாத்தூர் எம் எம் டி.ஏ. பகுதியில் கழகத்தின் இளைஞர் அணியில் செயலாற்றி வருபவர் பால் பார்த்திபன் இவரது தாயாரும், பாக முகவர் பிரவீன் குமாரின் பெரியம்மாவும், முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்கள் மீதும், கழகத் தலைவர் மு. க.ஸ்டாலின் அவர்கள் மீதும் மாறா பற்றும், அன்பும் கொண்ட ஜெ. மகேஸ்வரி அம்மாள் (வயது 70) அவர்கள் உடல்நிலை குறைவு காரணமாக இயற்கை எய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.

மகேஸ்வரி அம்மாள் இயற்கை எய்திய செய்தி அறிந்த மாதவரம் வடக்கு பகுதி செயலாளர் புழல் எம்.நாராயணன், 19வது வட்டச் செயலாளர் மாத்தூர் கா. தாமரைச்செல்வன், மாவட்ட வர்த்தக அணி தலைவர் மஞ்சம்பாக்கம் ஆர். பாபு,மாவட்ட தொழிலாளர் அணி துணை அமைப்பாளர் எஸ். உதயகுமார், பகுதி இளைஞரணி துணை அமைப்பாளர் ஜி. ராஜேஷ் கண்ணன் உள்ளிட்ட பலர் நேரில் சென்று அம்மையாரின் திருவுடலுக்கு மலர் மாலை வைத்து அஞ்சலி செலுத்தினார்கள்.

மேலும் மகேஸ்வரி அம்மாளை இழுந்து வாடும் குடும்பத்தாருக்கு ஆழ்ந்த இரங்கலையும் தெரிவித்துக் கொண்டார்கள்.

# ஒன்றிய அமைச்சர் பதவி விலகலுடன் முடிவதல்ல இவை! ‘நீட்’டை முற்றிலும் அகற்றுவதுதான் நம் தலைவரின் முழக்கம்!

கழகத் தலைவர் அவர்கள் முதல்வராக இருந்தபோது கொண்டுவந்த கனவுத் திட்டம்! முதலமைச்சரின் காலை உணவு திட்டத்திற்கு காமராஜர் பெயரை வைக்கிறாராம். கலைஞரால் சூட்டப்பட்ட விமான நிலையத்தில் இருந்த காமராஜர் பெயரை எடுத்து, அதற்கு எம்.ஜி.ராமச்சந்திரன் பெயர் வைக்க வேண்டும் என குரல் கொடுத்த செங்கோட்டையன், ஜே.சி.டி. பிரபாகரன் போன்றோரை பக்கத்தில் வைத்துக்கொண்டு, “ஊரான் வீட்டு நெய் என் பொண்டாட்டி கை” என சம்பந்தம் இல்லாமல் பெயர் வைத்து அள்ளி ஊற்றுகிறார் முதல்வர் விஜய்.

அப்படி என்ன “முதல்வர்” என்கிற பெயரில் விஜய்க்கு வெறுப்போ தெரியவில்லை. ஒருவேளை “முதல்வர்” என்று எழுதினாலே. கார்பனுக்கு கீழே மு.க.ஸ்டாலின் என்றுதான் வருகிறதோ, தெரியவில்லை.

நான் முதல்வன் என்றால் “முதல்வனை” எடுக்கிறார். முதல்வர் காலை உணவு திட்டம் என்றால் “முதல்வரை” எடுத்துவிட்டு காமராஜர் என்று பெயர் வைத்துள்ளார்.

பண்பாட்டின் சிகரமான தளபதி, அதைப்பற்றி கண்டு கொள்ளவில்லை. தன் தந்தையின் சிந்தனையில் உருவான புதிய தலைமைச் செயலகத்தை. செம்மொழி பூங்காவை, அறிஞர் அண்ணா நூற்றாண்டு நூலகத்தை அ.தி.மு.க.வினர் சிதைக்கும்போதே அவர்களது நாகரிகம் அவ்வளவுதான் என அமைதியாக கடந்துவிட்டார். மீண்டும் தி.மு.க. ஆட்சி மலர்ந்த உடன் மருத்துவமனையை மீண்டும் தலைமைச் செயலகமாக தளபதி மாற்றவில்லை. அம்மா உணவகம்” பெயர் மாற்றப்படவில்லை. பள்ளிக்கூட புத்தகப் “பை”யிலிருந்த ஜெயலலிதா - எடப்பாடி பழனிச்சாமி படத்தைக் கூட இரண்டு ஆண்டாக மாற்றவில்லை தளபதி. இவைகளுக்கான புதிய செலவுத் தொகையை கொரோனாவுக்கு நிதியாக மடை மாற்றினார் தளபதி ஸ்டாலின்.

தி.மு.க., கொரோனாவுக்கு குடும்பத்திற்கு ரூ. 5,000/- கொடுக்கச் சொன்னபோது, எடப்பாடி ரூ. 1.000/- மட்டும்தான் கொடுத்தார். தளபதி வந்தவுடன் 2+2 ஆக ரூ. 4,000/- கொடுத்து மக்களின் குறையைப் போக்கினார்.

இப்போது கூட ஆட்சிக்கு தி.மு.க. வந்திருந்தால் மகளிர்க்கு மாதம் ரூ. 2,000/- உடனே கொடுத்திருப்பார். ஏன் பிரிட்ஜ். வாஷிங்மெஷின் உள்ளிட்ட வீட்டு உபயோகப் பொருட்கள் வாங்கிட உதவியாக தலா ரூ.8,000/-கொடுத்திருப்பார் தளபதி.

எங்கே நிதியை திரட்டி, எங்கே மக்கள் நலத்திட்டத்திற்கு மாற்றலாம் என்கிற அனுபவம் அறிவு தந்தையிடம் கற்ற அறிவு உண்டு நம் கழகத் தலைவருக்கு.

ஆனால் விஜய் ரூ. 2,500/- தருவதற்கு, வேலையில்லா பட்டதாரி மாணவர்களுக்கு ரூ.4,000/-, முதியோர் பென்ஷன் ரூ.3,000/-. பெண்கள் திருமணத்திற்கு ஒரு பவுன் மற்றும் பட்டுப்புடவை, அரசு பள்ளியில் படித்த மாணவர்களின் குடும்பத்திற்கு ரூ.12.000/- வழங்குவதற்கு என எந்த தேர்தல் வாக்குறுதிகளையும் நிறைவேற்ற ஒரு சதவீத முயற்சி கூட அக்கறை காட்டவில்லை.

“அரசன் அன்று கொல்வான் - தெய்வம் நின்று கொல்லும்” என்பார்கள். பா.ஜ.க.வின் தூண்டுதலில், சினிமா கிளுகிளுப்பில் தி.மு.க. ஆட்சி அகன்றது அன்று. கொள்கை சீற்றத்தால் மாணவர் போராட்டத்தால் தர்மேந்திர பிரதான் பா.ஜ.க. அமைச்சர் அவையிலிருந்து அகற்றம் இன்று.

பா.ஜ.க.வின் வீழ்ச்சிக்கு பிரதான் முதல் அடி. இனி தொடர் அடி அது. ஆஞ்சநேயர் வால் போல் நீண்டு கொண்டிருக்கும்.

தர்மேந்திர பிரதான் விலகலுடன் நம் சிந்தனை, செயல் முடிவுக்கு வந்து விடாது. நீட்டையே அகற்ற வேண்டும் என்பதுதான் நமது தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் முழக்கம்.

நாடாளுமன்றத்தில் தமிழ்மொழிக்கு நாம் போராடிய போது, இன்று ராஜினாமா செய்த தர்மேந்திர பிரதான், தமிழர்களை ‘காட்டுமிராண்டிகள்” என்றார் அன்று. அதிகம் படிச்ச மூஞ்சுறு கழனிப்பனையில் விழுந்ததாம் என்பதுபோல தமிழர்களின் சாபம் அமைச்சர் பதவியை இழந்து நிற்கிறார் இன்று.

நாளை தர்மேந்திர பிரதான் போல இன்னொரு பிரதான் வரலாம். ஆதலால் நீட்டையே” விரட்ட வேண்டும் என்பதுதான் தி.மு.க.வின் வலியுறுத்தல்.

தமிழ்நாட்டில் பி.எம்.ஜி. திட்டத்தை ஏற்றால்தான் ஆண்டிற்கு 10.000 கோடி தருவேன் என அடம் பிடித்த தர்மேந்திர பிரதானை நீக்கியது மகிழ்ச்சியே.

ஆனாலும் தில்லியில் அறிவுக்கு- ஜனநாயகத்துக்கு போராட்டம். தமிழ்நாட்டில் கில்லி ஜனநாயகன் படத்திற்கு கொண்டாட்டம். பெண்கள் கல்வியில் 42% முன்னேறிய தமிழ்நாடு, ஜனநாயகன் படத்தை கொண்டாடுவது என்பதையும் மீறி தமிழர்கள் தைரியமாக நின்று போராடினார்கள்.

போராட்டத்தில் ஈடுபட்ட கல்லூரி புகுந்து, மாணவர்களின் விடுதிக்குள் சென்று கைது செய்து. அடித்து விரட்டி ஓட விட்ட காவல்துறை செயல் கண்டிக்கத்தக்கது.

மெரினாவையே பூட்டியது த.வெ.க.வின் காவல் துறை ஒருபுறம். மறுபுறம் புகழ் தி.மு.க.விற்கு வந்துவிடக்கூடாது என்பதற்காக மாணவர்கள் போராட்டத்தில் த.வெ.க.வின் நடிகை சனம் ஷெட்டி போன்றோர் கலந்து கொண்டு பேசினர்.

ஆனால் பேசுபொருளான “நீட்டினை” பேசாது. ஜனநாயகன் படப்புகழை மட்டுமே பேசினார் சனம். கொந்தளித்தது ஜனம். அதனால் ஒலிபெருக்கி பிடுங்கப்பட்டு விரட்டப்பட்டார்.

அமைச்சர் ராஜ்மோகன் பேசும்போது “மெரினா மெரினா” என குரல் எழுப்பி அவரை ஓட ஓட விரட்டினர்.

தி.மு.க. “போராட்டத்திற்கு” போகக்கூடாது, அது தங்களுக்கு விளம்பரம் தேடிக்கொள்ள என்கிறார் அமைச்சர் ராஜ்மோகன், அப்படியானால் காங்கிரஸ் தில்லியில் போராட்டத்தில் கலந்து கொண்டது தவறா? காங்கிரஸ் விளம்பரம் தேடுகிறதா?

தர்மேந்திர பிரதான் ராஜினாமா செய்த விவகாரத்தில் இது வரை ஆதரித்தோ, எதிர்த்தோ த.வெ.க. கருத்து கூட கூறவில்லை. ஏன் இந்த இரட்டை வேடம் த.வெ.க. போடுகிறது?

நீட்டைக் கொண்டு வந்தது காங்கிரஸ். அதை



கவிஞர்
**காசிமுத்து மாணிக்கம்**
(கழக வர்த்தகர் அணிச் செயலாளர்)

பல மடங்கு உறுதிப்படுத்துகிறது பா.ஜ.க. அன்றிலிருந்து இன்றுவரை நீட்டை எதிர்த்துக் கொண்டேதான் இருக்கிறது தி.மு.க.

தி.மு.க.வும் ஜெயலலிதாவின் அ.தி.மு.க.வும் ஆட்சியில் இருந்தவரை நீட்டோ, பா.ஜ.க.வோ தமிழ்நாட்டில் தலைகாட்ட முடியவில்லை.

டி.ஆர். பாலு நாடாளுமன்றத்திலும், அனைத்துக் கட்சி கூட்டத்திலும் நீட்டிற்கு எதிர்ப்பு தெரிவித்தார். ஆ.ராசா அமைச்சராக இருக்கும்போதே “தமிர்நாட்டில் நாங்கள் பொறியியல் கல்லூரியிலேயே நுழைவுத் தேர்வை எடுத்துவிட்டோம்” என்றார்.

“உச்சந்தலையில் இருந்து உள்ளங்கால் வரை” என்பது போல “நீட்டின் தொடக்கம் முதல் இன்று வரை” தி.மு.க. எதிர்ப்புடன் இருக்கிறது. அதற்கு உரிமை இல்லை என்று சொல்வதற்குத்தான் த.வெ.க.விற்கு தகுதி இல்லை.

இரட்டை வேடம் போட்டு வந்த த.வெ.க.விற்கு வேட்டுவைத்து பாடம் புகட்டினர் போராட்டத்தினர். த.வெ.க.வின் பா.ஜ.க. எடுபிடி வேஷம் நீட் போராட்டத்தால் மக்களுக்கு தெளிவாக தெரிந்தது.

த.வெ.க.வின் பா.ஜ.க எதிர்ப்பு வேஷம் “கருப்பு சாயம் வெளுத்து விட்டது டும் டும்’ என்கிற கதையாக தெளிந்தது. போராட்டம் அன்று வெளியிட்ட ஜனநாயகன் படத்தை 10 நாள் கழித்து விஜய் வெளியிட்டு இருக்கலாமே! நீங்கள்தானே முதல்வர் முடிவெடுக்க கூடாதா?

படத்துக்காக அமைச்சருக்கு ஒரு நாள் விடுமுறை கேட்கத் தெரிந்தவருக்கு, போராட்டத்திற்காக படத்தை தள்ளிப் போடத் தெரியாதா?

உங்கள் அலப்பறையில் ஜனநாயகன் படமே ஊத்திக்கிச்சு.

டெல்லி போராட்டத்தில் காங்கிரஸார் தி.மு.க.வை காணவில்லை எனக் கூறுகின்றனர்.

10 ஆண்டு காலமாக நீட்டை எதிர்த்து தி.மு.க. போராடுகிறது. ராகுல் கூட பிரதமர் வீடு முன்புதான் மோடியை எதிர்த்து போராடினாரே தவிர, “நீட்டை நிறுத்த கோரும் மாணவர்களுடன் ஜந்தர் மந்தர் மைதான போராட்ட களத்திற்கு நேரடியாக செல்லவே இல்லை”.

போராட்டக்குழுவுடன் கழக துணைப் பொதுச்செயலாளர் கனிமொழி கருணாநிதி அமர்ந்து போராடினார்கள், போர்க்குரல் எழுப்பினார்கள். இது தொலைக்காட்சிகளில் ஓடியது. ஆ.இராசா மருத்துவமனை வரை சென்று ஆறுதல் கூறியது எல்லா மீடியாக்களிலும் வந்தது.

கரப்பான்பூச்சி ஜனதா, தான் வென்றது என்பதனால் காங்கிரஸை கழட்டி விடலாமா? வெற்றிதான் தலைமைக்கு இலக்கு என்பது காங்கிரஸ் ஸ்டைல். இனி இந்தியாவுக்கு தலைமை தாங்கும் பொறுப்பு காங்கிரஸுக்கு இல்லை என்பது இந்தியாவிற்கு புரிந்துவிட்டது.

12 ஆண்டு கால தி.மு.க. தலைவர் தளபதி ஸ்டாலினின் உழைப்புக்கு ஒரு உயர்வு நியாயம் தீர்வு கிடைத்திருக்கிறது. த.வெ.க.வின் முகமூடி கிழிந்திருக்கிறது.

தளபதி ஸ்டாலின், ‘தொட்டது துலங்கும் கைபட்டது மலரும் விரைவில் நீட் ஒழியும்”